1984 மார்ச் 8]

அனுப்பி இருக்கிறேன். பயணப்படி எவ்வளவு என்பதும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது, அதாவது ஒரு கிலோ மீட்டருக்குச் செல்வதற்கு ஒரு ரூபாய் 5 பைசா செலவு செய்கின்ற வகையில் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த வட்டத்தின் உள்ளே எல்லா இடங்களுக்கும் அவர்கள் செல்லலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. என்னென்ன அதிகாரங்கள் அவர்களுக்கு இருக்கின்றன என்பதை எல்லாம் விளக்கி விவரங்களை அனுப்பி இருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மட்டும் அனுப்பினால் ஒருவேளை தவறாகப் போய்விடக்கூடும் என்பதால் இங்கே நேரடியாக நானும் மற்ற அதிகாரிகளும் பார்த்து செயலாளர் ஆகியோர் எல்லாம் கையெழுத்துப்போட்டு அனுப்பி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேரளாவிலுள்ள சித்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

216—(*வினா 17790)—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு அடையளிப்பாரா—

(அ) கேரளாவில் உள்ள சித்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குத் தமிழகப் பகுதியிலிருந்து கரும்பு கொடுக்கும் விவசாயிகளின் பிரதிநிதிகளாக இயக்குநர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா ?

(ஆ) இந்த ஆலையிலிருந்து ரோட் செஸ் ஆக, கரும்பு வழிச்சாலை அபிவிருத்திக்கு எவ்வளவு தொகை கிடைத்துள்ளது?

(இ) இதில் எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) ரூபாய் 30.42 இலட்சம்.

(இ) 1982-83-க்கு ரூபாய் 22 இலட்சத்திற்கு அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு சாலை வேலை எடுத்துக் கொள்ளப்பட்டது.

திரு. மா. சின்னராசு: தலைவர் அவர்களே, கோவை, மேட்டுப்பாளையம், அவினாசி, பல்லடம் தாலுக்காக்களில் கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்குச் சித்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைதான் புகலிடமாக இருப்பதால்—அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலை கேரளாவில் இருப்பதால்—அதனுடனுள்ள தொடர்பு மிகக் குறைவாக இருக்கிறது. நமது மாநிலத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மூன்று இயக்குநர்கள் பல ஆண்டுகளாக நியமிக்கப் படாதகாரணத்தால் விவசாயிகளுக்குக் கரும்பு எடுப்பது

ஆலைக்கு விலைக்குக் கொடுப்பது, கடன் கிடைப்பது போன்ற பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கு அங்கு வாய்ப்பு இல்லாமலிருக்கிறது. ஆகவே, இதை கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் உடனடியாக நமக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள மூன்று இயக்குநர்களை அந்த ஆலையில் நியமிக்க ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: அரசு முயற்சி எடுக்கும்.

(முற்பகல் 9–30)

திரு. மா. சின்னராசு: தலைவர் அவர்களே, ரோடு செஸ் மூலம் செலவிடப்பட்ட தொகை பற்றி குறிப்பிட்டார்கள். கரும்பு கொடுக்கப்படுகிற அந்தப் பகுதிகளில், கோவை தாலுக்காவில் இந்த ரோடு செஸ் மூலம் எந்தச் சாலையும் பராமரிக்கப்படவில்லை. அந்தப் பணம் செலவிடப்படவில்லை. ஆகவே கரும்பு கொடுக்கப்படுகிற அந்தப் பகுதிகளில் இந்த ரோடு செஸ்ஸிலிருந்து சாலைகளை அபிவிருத்தி செய்ய அரசு நிதி ஒதுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தச் சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. அந்தச் சாலை எந்தளவிற்குப் பழுதடைந்திருக்கின்றன என்ற முழு விவரத்தையும் அறிந்து உரிய வகையில் முழு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

கொங்கணாபுரத்தில் கடலை எண்ணெய் ஆலை அமைக்கும் திட்டம்.

217—(*வினா 19960)—திரு. இ. கணேசன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் இடைப்பாடி தொகுதியிலுள்ள கொங்கணாபுரத்தில் கடலை எண்ணெய் ஆலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இல்லை.

வடாற்காடு மாவட்டத்தில் முந்திரி பயிரிடுவதற்கான சிறப்புத் திட்டம்.

218—(*வினா 21518)—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் சிறப்புத் திட்டமாக முந்திரி பயிரிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இல்லை.